**O.S. No. 18 /2016**

**Date: 08.06.2026**

**வா.சா.1 சீத்தாராமன்**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

ரெங்கராஜ் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அவர் இறப்பிற்கு பின்னிட்டு அவரது மனைவி மகாலட்சுமி பெயருக்கு பட்டா மாறிவிட்டதா என்றால் அது பற்றி தெரியாது. வழக்கு பதிவு செய்யும் போது இந்த வழக்கு சொத்துக்கள் யார் பெயரில் இருந்தது என்று பார்த்தேனா என்றால் அது பற்றி தெரியாது. 2013 ல் மகாலட்சுமி இறந்து விட்டார் என்றால் சரிதான். மகாலட்சுமி இறந்தப்பின்னர் நடராஜன் பெயரில் பட்டா மாறிவிட்டதா என்றால் இல்லை. மேற்படி வழக்கு சொத்துக்கள் நடராஜன் அனுபவத்தில் உள்ளதை காட்டுவதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் நான் தாக்கல் செய்த வழக்கிற்கு என்ன பதில் போட்டுள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. தபசில் சொத்துக்கள் ரெங்கராஜ்க்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். ரெங்கராஜன் மனைவி மகாலட்சுமி என்பதும் சரிதான் அவர்கள் இருவரும் ஆசிரியர்கள் என்றால் சரிதான். மேற்படியார்களுக்கு குழந்தை கிடையாது என்றால் சரிதான். மேற்படியார்களுக்கு இடையே 2006 ம் ஆண்டுவாக்கில் மன கசப்பு ஏற்பட்டு தனித்தனியே வாழ்ந்து வந்தார்கள் என்றால் சரியல்ல. ரெங்கராஜன் குறிஞ்சாங்குளத்தில் இருந்தார் என்றாலும், அவரது மனைவி சென்னையில் உள்ள சிட்லபாக்கத்தில் இருந்தார் என்றால் சரியல்ல. நடராஜன் சென்னையில் சிட்லபாக்கத்தில் இருந்தார் என்றால் சரியல்ல, குறிஞ்சாங்குளத்தில் தான் இருந்தார். நடராஜன் அவரது தந்தை இறந்த பின்னர் பாண்டிச்சேரியில் இருந்து வந்து குறிஞ்சாங்குளத்தில் செட்டிலாகிவிட்டார். நடராஜன் என்பவரின் தந்தை எப்போது இறந்தார் என்ற விவரம் தெரியாது. எத்தனை வருடங்கள் என்றும் தெரியாது. மேற்படி நடராஜனை விசாரித்தால் தான் இந்த வழக்கு பற்றிய விவரம் தெரியும் என்றால் அவரை விசாரிக்க வேண்டிய அவசியம் இல்லை.

பிரதிவாதிகள், நடராஜன் இந்த வழக்கிற்கு அவசிய கட்சி என்று சொல்லியுள்ளார்கள் என்றால் அவர் அவசிய கட்சி கிடையாது. ரெங்கராஜன் மற்றும் அவரது மனைவி மகாலட்சுமி திருத்தங்கலில் தான் 52 வருடங்களாக குடியிருந்தார்கள் என்றால் 30 வருடங்கள் குடியிருந்து வந்தார்கள். மேற்படியார்கள் ஆசிரியர் வேலை பார்த்த வகையில் வசதியாகத்தான் இருந்தார்கள். அவர்கள் கடன் ஏதும் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. குறிஞ்சாங்குளத்தில் ரெங்கராஜனும் அவரது மனைவி மகாலட்சுமியும் வசதியானவர்கள் என்றால் சரிதான். எனக்கு பூர்வீகமாக இருந்த துார்ந்து போன வீட்டை எனது சகோதரருக்கு கொடுத்து விட்டேன் என்றால் எழுதி கொடுத்துவிட்டேன் பணம் ஏதும் வாங்கவில்லை. நான் இந்த வழக்கு தாக்கல் செய்தது முதல் 1ம் பிரதிவாதியுடன் பேசுவதில்லை. நடராஜன் என்பவருடன் பேசிக்கொள்வேன். ரெங்கராஜன் என்பவர் குறிஞ்சாங்குளத்தில் வைத்து இறந்துவிட்டார், அவரது மனைவி மகாலட்சுமி சென்னையில் வைத்து இறந்துவிட்டார். ரெங்கராஜன் என்பவர் அவருடைய முதிர்வயதில் இந்த 1ம் பிரதிவாதியுன் இருந்து அவரது சொத்துக்களை 1ம் பிரதிவாதிக்கு உயில் எழுதி கொடுத்துவிட்டார் என்றால் உயில் ஏதும் கிடையாது. ரெங்கராஜன் குடும்பத்திற்கும், இந்த 1ம் பிரதிவாதிக் குடும்பத்திற்கும் இடையே என்ன நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. தாவா சொத்தை 1ம் பிரதிவாதி அனுபவம் செய்து வந்ததை நான் எனக்கு வீடு இல்லாத காரணத்தினால் வீட்டில் குடியிருக்க நான் அனுமதி கேட்டேன் என்று சொன்னால் சரியல்ல. இறந்து போன மகாலட்சுமி நடராஜன் என்பவருக்கு உயில் எழுதி கொடுத்த விவரம் தெரியும், எந்த சொத்தைப் பொருத்து உயில் எழுதி வைத்தார் என்ற விவரம் தெரியாது. மகாலட்சுமி நடராஜன் என்பவருக்கு உயில் எழுதி கொடுத்த போது நான் உடன் சென்றேனா என்றால் இல்லை. மேற்படி உயில் ஆவணத்தில் கையெழுத்து செய்தாரா அல்லது கைரேகை செய்தாரா என்ற விவரம் தெரியுமா என்றால் கையெழுத்து செய்யவில்லை, கைரேகை வைத்தார். மகாலட்சுமி இறக்கும்போது அவருக்கு 85 வயது இருக்கும் என்றால்

அது பற்றி எனக்கு தெரியாது. ரெங்கராஜனுக்கும், மகாலட்சுமிக்கு வயது மூப்பின் காரணமாக கைநடுக்கம் இருந்ததால் கைரேகைதான் வைப்பார்கள் என்றால் மகாலட்சுமி கைரேகை வைத்தது தான் தெரியும். வழக்கு போட்ட பின்பு மகாலட்சுமியும், ரெங்கராஜனும் கையெழுத்து செய்வார்களா அல்லது கைரேகை செய்வார்களா என்று விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. 2015 ல் நான் கிரையம் வாங்கும் போது நடராஜன் ஒத்தி ஆவணத்தையும், கிரைய பத்திரத்தையும் ஒரே நாளில் என்னிடம் கொடுத்தார் என்றால் சரிதான். எதிர் வழர்ககுரையை எனது வழக்கறிஞர் என்னிடம் படித்துக் காட்டினார். எதிர் வழக்குரையில் உள்ள விவரங்கள் அனைத்தையும் தெரிந்து கொண்டேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் எனக்கும், 1ம்பிரதிவாதிக்கும் சுமூகமான உறவு இருந்தது என்றால் சரிதான். மகாலட்சுமி, நடராஜனுக்கு உயில் எழுதிவைத்தது மோசடியானது என்றாலும், அந்த உயில் ஆவணத்தின் அடிப்படையில் நடராஜன் எனக்கு கிரையம் கொடுத்ததாக சொல்வது தவறானது என்றாலும் சரியல்ல. உயில் ஆவணத்தை புதுப்பட்டி கிராமத்திற்கு அருகே உள்ள கணேச முருகன் என்ற பத்திர எழுத்தர் எழுதினார் என்றால் சரிதான். கிரைய ஆவணத்திற்குண்டான தொகையை வழக்கு முடிந்தபின்னர் தந்தால் போதும் என்று கூறிதான் நடராஜன் எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல நான் கிரைய தொகையை கொடுத்துவிட்டேன். கோபாலகிருஷ்ணன் ரூ.50,000/– பெற்றுக்கொண்டு உயில் ஆவணத்தையும், கிரைய ஆவணத்தையும் தயார் செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல கோபாலகிருஷ்ணன் வரவில்லை. நடராஜன் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்திற்கு மறுபயன் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வீட்டு சம்மந்தமாக எனக்கும்,எனது மனைவிக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு சொத்து வாங்கும் அளவிற்கு வசதியில்லை என்றால் சரியல்ல. நடராஜனும், நானும், கோபாலகிருஷ்ணன் என்பவரும் சேர்ந்து தான் உயில் ஆவணத்தையும், கிரைய ஆவணத்தையும் உற்பத்தி செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. நடராஜன்

எங்கள் ஊரில் தான் குடியிருக்கிறார் என்பதற்கான ஆவணங்கள் கிடையாது என்றால் அவர் சென்னைக்கு மாறிவிட்டதால் முகவரி மாறிவிட்டது. ஒத்தி ஆவணத்தை நடராஜன் கழுகுமலையில் வாங்கி கொண்டுவந்தார் என்றால் நான் தான் வாங்கி வந்தேன். ஒத்தி ஆவணத்தை யார் எழுதினார் என்றால் புதுப்பட்டியை சேர்ந்த குருசாமி என்பவர் எழுதினார். குருசாமி என்பவரும் எழுத்தர் தான், ஒத்தி ஆவணத்தை எழுதியவரும், சரிபார்த்தவரும் என்று சொல்லி தான் அவர் கையெழுத்து செய்து கொடுத்தார் என்றால் சரிதான். 21.12.2012 ல் ரெங்கராஜன் என்பவர் ஒரு உயில் ஆவணத்தை மகாலட்சுமிக்கு பிறப்பித்துக்கொடுத்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ரெங்கராஜன் உயிடன் இருக்கும்வரைக்கும் அவரது மனைவி மகாலட்சுமிக்கு உயில் எழுதி வைத்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 21.12.2011 ல் ரெங்கராஜ் அவரது மனைவிக்கு பதிவு செய்யப்படாதா உயில் எழுதிவைத்ததாக நடராஜன் கொண்டு வந்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மகலாட்சுமி, நடராஜனுக்கு உயில் ஆவணம் எழுதி வைத்து அதில் உள்ள சொத்துக்கள் எல்லாம் 1 ம் பிரதிவாதியின் மகள் கௌசல்யாவுக்கு பெயர் மாற்றம் ஆகிவிட்டதா என்றால் அது பற்றி தெரியாது அந்த உயில் ஆவணம் மோசடியானது.

பிரதிவாதி தரப்பில் மாவட்ட நீதிமன்றத்தில் சங்கரன்கோவில் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நடைபெற்ற அசல் வழக்கு எண். 182/2018 சம்மந்தமான ஆவணங்கள் நகல் பெறவேண்டி நிலுவையில் இருப்பதால் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/–P.Mahindra Varma
Subordinate Judge,
Sankarankovil.